**PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF TVL. TOP GRANITES COLOUR GRANITE QUARRY, SF.NO.1151/5, 1151/6, 1172/2A, LEASE OVER AN EXTENT OF 1.13.46 HA AT IRUDHUKOTTAI VILLAGE, DENKANIKOTTAI TALUK, KRISHNAGIRI DISTRICT ON 20.08.2024 AT 10.30 AM M/S.SRI CHOWDESHWARI CONVENTION HALL, SRI CHOWDESHWARI COMPLEX, ANCHETTY MAIN ROAD, DENKANIKOTTAI VILLAGE, DENKANIKOTTAI TALUK, KRISHNAGIRI DISTRICT:**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Tmt.R.A.Priyanka I.A.S | : | Sub Collector, Hosur<br>(Representative of the District Collector, Krishnagiri) |
| 2 | Er. M.Selvakumar | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board, Hosur,<br>Krishnagiri District |
| 3 | Er. K. Ganesan | : | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board, Hosur,<br>Krishnagiri District |
| 4 | Thiru. P.Raja Gopal | : | The Managing Director,<br>Tvl. Top Granites |
| 5 | Thiru.S. Nagamani | : | EIA Consultant,<br>M/s. Geo Exploration and Mining Solutions Limited, Salem |
| | Public | : | 30 Nos. (Attendance enclosed as Annexure) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed the Sub Collector, Hosur (Representative of the District Collector, Krishnagiri), Revenue officials, all the general public and project proponent who have attended the public hearing for the proposed Tvl. Top Granites Colour Granite Quarry, Lease over an Extent of 1.13.46 Ha

Located at SF.No.1151/5, 1151/6, 1172/2A, Irudhukottai Village, Denkanikott. Taluk, Krishnagiri District is required to get Environmental Clearance (EC) from the State Environment Impact Assessment Authority of Tamilnadu. He added that the public notice informing the conducting of Public Hearing was published in the Tamil and English dailies, such as, “Dinakaran” and “The Hindu” dated 10.07.2024 and bit notices regarding public hearing was issued to the public of Irudhukottai Village, Bogichandra Village and Basavanapura Village with audio announcement through auto vehicle in and around the villages. Further, he informed that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponents will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

The Sub Collector, Hosur (Representative of the District Collector, Krishnagiri) has initiated the Public Hearing process. Further, the Sub Collector, Hosur has requested the project proponent to explain about their proposed colour granite quarry project through power point presentation and requested the public to obtain necessary clarifications for their doubts.

Thereafter, Thiru.P.Raja Gopal, EIA Consultant, M/s. Geo Exploration and Mining Solutions Limited, Salem of the proposed colour granite quarry project has made presentation about the proposed colour granite quarry project to the public along with Environmental Management Plan. Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has invited the public to express their views and comments about the proposed colour granite quarry project. The views and suggestions of the public are detailed below:

1. **Thiru. D.Nagaraj, Anchetty Village:**

Thiru. D. Nagaraj has said that, due to this quarrying project, the local people will get employment in the locality and thus will avoid going to work other areas. He also requested that, the revenue generated from the quarry should be utilized to help the schools and roads in the local village. They also asked the quarry management to help erect a fence around the farm so that wild elephants do not harm the farmland. As the proposed quarry will not cause any harm to the local people, he requested to grant permission for the proposed quarry.

2. **Thiru. Sivakumar, Anchetty Village:**

Thiru. Sivakumar has said that, this proposed quarry project will provide employment opportunities to local people. Therefore, he requested to grant permission for the proposed quarry.

3. **Thiru. Dharmalingam, Anchetty Village:**

Thiru. Dharmalingam has said that, the coming of this quarry in Vanniapuram village will bring more benefits. He also requested that, the taxes of this quarry should be used to help improve the local school and roads in the village. He said that due to the establishment of this quarry, the heavy vehicle drivers in this village will get employment and thus the livelihood of fifty families will increase.

4. **Thiru. Maarappa, Thottikuppam Village:**

Thiru. Maarappa has said that, as the proposed quarry will not cause any harm to the local people, he requested to grant permission for the proposed quarry.

5. **Thiru. Muniraj, Thottikuppam Village:**

Thiru. Muniraj has said that, the quarry management is helping the local people. Therefore, he said, there is no objection to this proposed project.

6. **Thiru. Krishna Reddy, Thandarai Village:**

Thiru. Krishna Reddy has said that, the quarries and crushers should be operated in a pollution-free manner without harming all the people. He also asked the quarry management to help the local youth and farmers. Later, he said that the nearby village of Koratagiri was affected by the crushers and requested the management of this quarry to act in a way that would benefit the local village.

**Conclusion:**

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Krishnagiri informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

Further, no petition was received on the proposed Tvl. Top Granites colour granite quarry project during the public hearing meeting.

Further, it is informed that there is no written representation was received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, Krishnagiri District from the public on the proposed colour granite quarry project.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed

**District Environmental Engineer**
**Tamilnadu Pollution Control Board**
**Hosur**

**Sub Collector**
**Hosur**

**District Collector**
**Krishnagiri**

**திருவாளர். டாப் கிரானைட்ஸ், சர்வே. எண். 1151/5, 1151/6, 1172/2A, இருதுகோட்டை கிராமம், தேன்கனிக்கோட்டை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட வண்ண கிரானைட் குவாரி – 1.13.46 ஹெக்டேர் பரப்பளவில் நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 20.08.2024 அன்று அஞ்செட்டி மெயின் ரோடு, தேன்கனிக்கோட்டை கிராமம், தேன்கனிக்கோட்டை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள தி/ள். ஸ்ரீ சௌடேஸ்வரி கன்வென்சன் ஹால் (கல்யாண மண்டபம்) – இல் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:**

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதி.R.A.பிரியங்கா இ.ஆ.ப., | : | சார் ஆட்சியர், ஓசூர்<br>(மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி) |
| 2 | Er.M. செல்வகுமார் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 3 | Er.K.கணேசன் | : | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 4 | திரு. ப.ராஜ கோபால் | : | நிர்வாக இயக்குநர்<br>திருவாளர். டாப் கிரானைட்ஸ் |
| 5 | திரு. S. நாகமணி | : | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர்<br>தி/ள். ஜீயோ எக்ஸ்பொளரேசன் அண்டு மைனிங் சொல்யுசன்ஸ், சேலம். |
| | பொதுமக்கள் | : | 30 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

திருவாளர். டாப் கிரானைட்ஸ் வண்ண கிரானைட் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த சார் ஆட்சியர், ஓசூர், பொதுமக்கள் மற்றும் திருவாளர். டாப் கிரானைட்ஸ்

வண்ண கிரானைட் குவாரியின் உரிமையாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினகரன் மற்றும் தி இந்து" நாளிதழ்களில் 10.07.2024 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், இருது கோட்டை கிராமம், போகி சந்திரா கிராமம், பசவனபுரா கிராமம்ஆகிய கிராமங்களின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக குவாரியின் திட்ட ஆலோசகர் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள வண்ண கிரானைட் குவாரியின் உரிமையாளர்கள் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் வண்ண கிரானைட் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும் இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

சார் ஆட்சியர், ஓசூர், அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர் திருவாளர். டாப் கிரானைட்ஸ் திட்டத்தின் உரிமையாளர்களை உத்தேசிக்கப்பட்டுள்ள வண்ண கிரானைட் குவாரி தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

திருவாளர். டாப் கிரானைட்ஸ் நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு. S. நாகமணி, தி/எ்.ஜியோ எக்ஸ்பொளரேசன் அண்டு மைனிங் சொல்யுசன்ஸ், சேலம். அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று வண்ண கிரானைட் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொதுமக்கள் கருத்துகேட்பு:**

1. **திரு.D. நாகராஜ், அஞ்செட்டி கிராமம்:**

திரு. D. நாகராஜ் அவர்கள், இக்குவாரி திட்டம் வருவதால் உள்ளூர் மக்களுக்கு உள்ளூரிலே வேலை வாய்ப்பு கிடைக்கும் என்றும் இதனால் அவர்கள் வெளியூர் சென்று வேலை செய்வது தவிர்க்கப்படும் என்று கூறினார். மேலும், குவாரியின் மூலம் கிராமத்திற்கு கிடைக்கும் வருவாயில் உள்ளூரில் அமைந்துள்ள பள்ளிகள் மற்றும் சாலை வசதிக்கு உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். மேலும், காட்டு யானைகள் விவசாய நிலத்தை பாதிக்காத வகையில் சுற்றிலும் வேலி அமைக்க குவாரி நிர்வாகத்தினர் உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

உத்தேசிக்கப்பட்டுள்ள இக்குவாரியால் உள்ளூர் மக்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லாத காரணத்தால்,குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

2. **திரு.சிவக்குமார், அஞ்செட்டி கிராமம்:**

திரு. சிவக்குமார் அவர்கள், இக்குவாரி வருவதினால் உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். எனவே, இக்குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

3. **திரு . தர்மலிங்கம், அஞ்செட்டி கிராமம்:**

திரு. தர்மலிங்கம் அவர்கள், வன்னியபுரம் கிராமத்தில் இக்குவாரி வருவதினால் அதிகளவில் நன்மை ஏற்படும் என்று கூறினார். மேலும், இக்குவாரியின் வரிப்பணத்தில் உள்ளூரில் அமைந்துள்ள பள்ளி மற்றும் சாலை மேம்பட்டிற்கு உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். இக்குவாரி அமைவதால் உள்ளூரில் உள்ள கனரக வாகன ஓட்டுநர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்குமென்றும் அதனால் ஐம்பது குடும்பங்களுக்கு வாழ்வாதாரம் உயரும் என்று கூறினார்.

4. **திரு . மாரப்பா, தோட்டிக்குப்பம் கிராமம்:**

திரு. மாரப்பா அவர்கள், இக்குவாரி வருவதால் எவ்வித பிரச்சனையும் இல்லையென்றும், இக்குவாரி திட்டத்திற்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

5. **திரு . முனிராஜ், தோட்டிக்குப்பம் கிராமம்:**

திரு. முனிராஜ் அவர்கள், இக்குவாரி நிர்வாகத்தினர் உள்ளூர் மக்களுக்கு உதவி செய்து வருகின்றனர். எனவே, இத்திட்டத்திற்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று கூறினார்.

6. **திரு . கிருஷ்ணாரெட்டி, தண்டரைகிராமம்:**

திரு. கிருஷ்ணாரெட்டி அவர்கள், அனைத்து மக்களுக்கும் பாதிப்பின்றி, மாசு ஏற்படாத வகையில் குவாரி மற்றும் கிரஷர்களை இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். மேலும், இக்குவாரி நிர்வாகத்தினரிடம் உள்ளூர் இளைஞர்கள், விவசாயிகள் ஆகியோருக்கு உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். பின்பு, அருகில் உள்ள கொரட்டகிரி கிராமத்தில் கிரஷர்களால் பாதிப்பு ஏற்பட்டது என்றும், அதுபோல் இக்குவாரி நிர்வாகத்தினர் செயல்படாமல் உள்ளூர் கிராமத்திற்கு நன்மை பயக்கும் வகையில் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

**முடிவுரை:**

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள திருவாளர். டாப் கிரானைட்ஸ் வண்ண கிரானைட் குவாரி திட்டம் தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின்போது பொதுமக்களிடமிருந்து எவ்வித மனுக்களும் பெறப்படவில்லை.

மேலும், திருவாளர். டாப் கிரானைட்ஸ் உத்தேசிக்கப்பட்டுள்ள வண்ண கிரானைட் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்தில்எவ்வித மனுக்களும் பெறப்படவில்லை.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**
**ஓசூர்**

**சார் ஆட்சியர்**
**ஓசூர்**

**மாவட்ட ஆட்சியர்**
**கிருஷ்ணகிரி**